# Vinayagar Potri (Page 1 of 6)

1 ஓம் எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
AUM ennum porulai ulloy potri

2 ஓம் பூமனம் பொருள் தொறும் பொலிவாய் போற்றி
AUM poomanum porul thorum polivay potri

3 ஓம் அகரம் முதலென ஆனாய் போற்றி
AUM Agaram mudalena aanay potri

4 ஓம் அகர உகர ஆதி போற்றி
AUM Agara ugara Aadi potri

5 ஓம் மகரமாய் நின்ற வானவ போற்றி
AUM Magaramay ninra vaanava potri

6 ஓம் பகர் முன்னவனாம் பரனே போற்றி
AUM pagar munnavanaam baranae potri

7 ஓம் மண்ணாய் விண்ணாய் மலர்ந்தாய் போற்றி
AUM mannay vinnay malarnday potri

8 ஓம் கண்ணுள் மணியாய் கலந்தாய் போற்றி
AUM kannul maniyay kalanday potri

9 ஓம் நீர்தீக் காற்றாய் நின்றாய் போற்றி
AUM neerteek kaatraay ninray potri

10 ஓம் கார்குளிராக கனிந்தாய் போற்றி
AUM kaarkuliraaga kaninday potri

11 ஓம் பகலவன் நிலவாய் பரந்தாய் போற்றி
AUM pagalavan nilavaay paranday potri

12 ஓம் நிகர்மீன் கணமாய் நிலைத்தாய் போற்றி
AUM nigarmeen kanamaay nilaittaay potri

13 ஓம் மழைபொழி இமய வல்லிசேய் போற்றி
AUM mazhaipozhi imaya vallisey potri

14 ஓம் தழைசெவி எண்தோள் தலைவ போற்றி
AUM tazhaisevi enthol talaiva potri

15 ஓம் திங்கட் சடையோன் செல்வ போற்றி
AUM tingat sadaiyoan selva potri

16 ஓம் எங்களுக்கு அருளும் இறைவா போற்றி
AUM engalukku arulum iraiva potri

17 ஓம் ஆறுமுகச் செவ்வேட்க்கு அண்ணா போற்றி
AUM Aarumugach chevvaetkku annaa potri

18 ஓம் சிறுகண் களிற்றுத் திருமுக போற்றி
AUM sirukan kalittru thirumuga potri

19 ஓம் செம்பொன் மேனிச் செம்மால் போற்றி
AUM sempon maenich semmaal potri

20 ஓம் உம்பர் போற்றும் உம்பல் போற்றி
AUM umbar poattrum umbal potri

# Vinayagar Potri - Page 2 of 6

21 ஓம் பண்ணியம் ஏந்துகைப் பண்ணவ போற்றி
AUM panniyam aendukai pannava potri

22 ஓம் எண்ணிய எண்ணியாங்கு இசைப்பாய் போற்றி
AUM enniya enniyaanggu isaippay potri

23 ஓம் அப்பமும் அவலும் கப்புவாய் போற்றி
AUM appamum avalum kappuvay potri

24 ஓம் முப்புரி நூல்மார்பு அப்பா போற்றி
AUM muppuri noolmaarbu appaa potri

25 ஓம் எள்ளுருண்டை பொறி ஏற்பாய் போற்றி
AUM ellurundai pori etrpaay potri

26 ஓம் தெள்ளறு தெவிட்டாத் தேனே போற்றி
AUM tellaru tevitthaa thaenae potri

27 ஓம் மூவர் மொழியிடம் மொழிந்தாய் போற்றி
AUM moovar mozhiyidam mozhinday potri

28 ஓம் தேவர்க்கு அரிய தேவா போற்றி
AUM devarkku ariya devaa potri

29 ஓம் மாலுக்கு அருளிய மதகரி போற்றி
AUM Maalukku aruliya madakari potri

30 ஓம் பாலெனக் கடல்நீர் பருகினாய் போற்றி
AUM Balenak kadalneer parukinaay potri

31 ஓம் பாரதம் எழுதிய பருஉக்கர போற்றி
AUM baradam ezhudiya paru ukkara potri

32 ஓம் மாரதம் அச்சொடி மதவலி போற்றி
AUM maaradam acchodi madavali potri

33 ஓம் மாங்கனி அரன்பால் வாங்கினோய் போற்றி
AUM maangkani aranpaal vaangkinoy potri

34 ஓம் ஈங்கினி எம்பால் எழுந்தருள் போற்றி
AUM eengkini embaal ezhundarul potri

35 ஓம் கரும்பு ஆயிரம்கொள் கள்வா போற்றி
AUM karumbu aayiram kol kalvaa potri

36 ஓம் அரும்பொருளே எம் ஐயா போற்றி
AUM arum porulae em ayyaa potri

37 ஓம் திணைபால் கடந்த தேவே போற்றி
AUM tinaipaal kadanda devae potri

38 ஓம் புணையாய் இடர்க்கடல் போக்குவாய் போற்றி
AUM punaiyay idarkkadal pokkuvaay potri

39 ஓம் பேழை வயிற்றுப் பெம்மான் போற்றி
AUM paezhai vayittrup pemmaan potri

40 ஓம் ஏழைக்கு இரங்கும் எம் இறை போற்றி
AUM aezhaikku irangum em irai potri

41 ஓம் அடியவர் உள்ளம் அமர்ந்தாய் போற்றி
AUM adiyavar ullam amarndaay potri

42 ஓம் அடிமலர் எம்தலை அணிவாய் போற்றி
AUM adimalar emtalai anivaay potri

43 ஓம் திருநீற்று ஒளிசேர் செம்மால் போற்றி
AUM thiruneettru olissaer semmaal potri

44 ஓம் இரு வேறு உருவ ஈசா போற்றி
AUM iru vaeru uruva Eesaa potri

45 ஓம் உள்ளத்து இருளை ஒழிப்பாய் போற்றி
AUM ullattu irulai ozhippaay potri

46 ஓம் கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
AUM kallap pulanaik karaippaay potri

47 ஓம் நம்பியாண்டார்க்கு அருள் நல்லாய் போற்றி
AUM nambiyaandaarkku arul nallaay potri

48 ஓம் எம்பிரானாக இனிதே இசைந்தாய் போற்றி
AUM empirannaga inidae isainday potri

49 ஓம் உருகுவோர் உள்ளத்து ஒளியே போற்றி
AUM urukuvor ullattu oliyae potri

50 ஓம் பெருகு அருள் சுரக்கும் பெருமான் போற்றி
AUM perugu arul surakkum perumaan potri

51 ஓம் தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
AUM tambikku valliyait ta day potri

52 ஓம் உம்பர்கட்கு அரசே ஒருவ போற்றி
AUM umbarkatkku arasae oruva potri

53 ஓம் பிள்ளையார்ப் பெயர்கொண்டு உள்ளாய் போற்றி
AUM Pillaiyaarp peyarkondu ullaay potri

54 ஓம் வள்ளலாய் நலன்கள் வழங்குவாய் போற்றி
AUM Vallalaay nalangal vazhanguvaay potri

55 ஓம் மூவாச் சாவா முத்தா போற்றி
AUM moovaach saavaa muttaa potri

56 ஓம் ஆவா எங்களுக்கு அருள்வாய் போற்றி
AUM aavaa engalukku arulvaay potri

57 ஓம் தமிழ்ச்சுவை சார்திருச் செவியோய் போற்றி
AUM tamizhchuvai saartiruch seviyoy potri

58 ஓம் அமிழ்தாய் எம்மகத்து ஆனாய் போற்றி
AUM amizhtaay emmagattu aanaay potri

59 ஓம் மழவிளங்களிரே மணியே போற்றி
AUM mazhavilangalirae maniyae potri

60 ஓம் குழவியாய் சிவன்மடி குலவுவோய் போற்றி
AUM kuzhaviyay sivenmadi kulavuvoy potri

# Vinayagar Potri - Page 4 of 6

61 ஓம் பெருச்சாளியூரும் பிரானே போற்றி
AUM péruchchaaliyurum Piranae potri

62 ஓம் நரிச் செயலார்பால் நண்ணாய் போற்றி
AUM narich seyalaarpaal nannay potri

63 ஓம் செந்தாமரைத் தாள் தேவா போற்றி
AUM sentaamaray taal devaa I potri

64 ஓம் நந்தா மணியே நாயக போற்றி
AUM nandaa maniyae naayaga potri

65 ஓம் இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி
AUM irulsaer iruvinai erivaay potri

66 ஓம் கரிமுகத்து எந்தாய் காப்போய் போற்றி
AUM karimugattu endaay kaappoy potri

67 ஓம் ஆங்காரம்முளை அறுப்பாய் போற்றி
AUM aangkaarammullai aruppaay potri

68 ஓம் பாங்கார் இன்பப் பராபர போற்றி
AUM baanggaar inbap paraapara potri

69 ஓம் கற்றவர் விழுங்கும் கனியே போற்றி
AUM kattravar vizhungum kaniyae potri

70 ஓம் மற்றவர் காணா மலையே போற்றி
AUM mattravar kaanaa malaiyae potri

71 ஓம் சொல்லொடு பொருளின் தொடர்பே போற்றி
AUM sollodu porulin todharbae potri

72 ஓம் கல்லும் கரைக்க வல்லோய் போற்றி
AUM kallum karaikka valloy potri

73 ஓம் தொந்தி வயிற்றுத் தந்தி போற்றி
AUM thondi vayittru tandi potri

74 ஓம் முந்திய பொருட்கும் முந்தியோய் போற்றி
AUM mundiya porutkkum mundiyoy potri

75 ஓம் ஐந்து கை உடைய ஐய போற்றி
AUM Ayindu Kai udaya ayya potri

76 ஓம் ஐந்தொழில் ஆற்றும் அமர போற்றி
AUM ayinthozhil aattrum amara potri

77 ஓம் அருளாய் அருள்வாய் ஆண்டவ போற்றி
AUM arulay arulvaay aandava potri

78 ஓம் தருவாய் மணமலர்த் தாராய் போற்றி
AUM taruvay manamalart taaray potri

79 ஓம் கயமுக அசுரனைக் காய்ந்தாய் போற்றி
AUM kayamuga asuranaik kaayinday potri

80 ஓம் மயலரும் இன்ப வாழ்வே போற்றி
AUM mayalarum inba vazhvae potri

81 ஓம் ஆனையாய் புழுவாய் ஆனாய் போற்றி
AUM aanaiyay puzhuvay aanay potri

82 ஓம் பானை வயிற்றுப் பாரமே போற்றி
AUM paanai vayittrup baaramae potri

83 ஓம் கடம்பொழி யானைக் கன்றே போற்றி
AUM kadampozhi yaanaik kanrae potri

84 ஓம் மடம்ஒழி அறிவின் வளனே போற்றி
AUM madamozhi arivin valanae potri

85 ஓம் பாலொடு தேனும் பருகுவோய் போற்றி
AUM paalodu taenum paruguvoy potri

86 ஓம் மேலோட கீழாய் மிளிர்வோய் போற்றி
AUM maeloada keezhaay milirvoy potri

87 ஓம் எய்ப்பில் வைப்பாய் இருந்தோய் போற்றி
AUM eyippil vayppay irundoy potri

88 ஓம் மெய்ப்பொருள் வேழ முகத்தான் போற்றி
AUM meypporul vaezha mugattaan potri

89 ஓம் நல்லார்க்கு எட்டும் நாதா போற்றி
AUM nallaarkku ettum naadaa potri

90 ஓம் பொல்லா மணியே புராதன போற்றி
AUM pollaa maniyae puraadana potri

91 ஓம் அறிவின் வரம்பில் அகன்றாய் போற்றி
AUM arivin varambil aganraay potri

92 ஓம் குறிகுணம் கடந்த குன்றே போற்றி
AUM kurigunam kadanda Kundrae potri

93 ஓம் எட்டு வான்குணத்து எந்தாய் போற்றி
AUM ettu vaangunattu enday potri

94 ஓம் கட்டறு களிற்று முகத்தோய் போற்றி
AUM kattaru kalittru mugatthoy potri

95 ஓம் மலரில் மணமாய் வளர்ந்தாய் போற்றி
AUM malaril manamay valarndaay potri

96 ஓம் அலர் கதிர் ஒளியில் அமர்வோய் போற்றி
AUM alar Kadir oliyil amarvoy potri

97 ஓம் ஓங்காரம் முகத்து ஒருத்தல் போற்றி
AUM ongkaaram mugattu oruttal potri

98 ஓம் ஏங்காது உயிர்க்கு அருள் இயற்கை போற்றி
AUM aengaadu uyirkku arul iyarkai potri

99 ஓம் எண்ணும் எழுத்துமாய் இசைந்தாய் போற்றி
AUM ennum ezhuttumaay isaindaay potri

100 ஓம் பண்ணும் பயனுமாய் பரந்தாய் போற்றி
AUM pannum payanumaay paranday potri

# Vinayagar Potri - Page 6 of 6

101 ஓம் அருவே உருவே அருஉரு போற்றி
AUM aruvae uruvae aruuru potri
102 ஓம் பொருளே பொருளின் புணர்ப்பே போற்றி
AUM porulae porulin punarppae potri

103 ஓம் புகர்முகக் களிற்றுப் புண்ணிய போற்றி
AUM pugarmugak kalittrup punniya potri

104 ஓம் அகலிடம் நிறைய அமர்ந்தோய் போற்றி
AUM agalidam niraiya amarnthoy potri

105 ஓம் செல்வம் அருள்க தேவா போற்றி
AUM selvam arulga devaa potri

106 ஓம் நல்லன எமக்கருள் நாயக போற்றி
AUM nallana emmakkarul nayaga potri

107 ஓம் ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி
AUM aakkamum uukkamum arulvaay potri

108 ஓம் காக்க எங்களை உன் கழலினைப் போற்றியே ....
AUM kakka engalai oune kazhalinaip potriyae …